# News Release

# வாகன் கவுன்சில் 0% சொத்து வரி உயர்வை ஏற்றுக்கொண்டது

**வாகன், ஒன்ராறியோ (பிப். 24, 2026)** – உள்ளூர் நிலைப்பாட்டில் 0 சதவீத சொத்து வரி உயர்வை வழங்குவதுடன், வாழ்க்கைச் செலவை குறைப்பது, சமூகப் பாதுகாப்பை முன்னுரிமைப்படுத்துவது மற்றும் போக்குவரத்து நெரிசலை குறைப்பது ஆகியவை வாகன் நகரத்தின் 2026 பட்ஜெட் மற்றும் 2027 முதல் 2030 வரை மூலதனத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தப் பட்ஜெட் 2026 பிப்ரவரி 24 அன்று நடைபெற்ற சிறப்புக் கவுன்சில் (பட்ஜெட்) கூட்டத்தில் வாகன் கவுன்சிலால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொரொண்டோ பகுதி (GTA) முழுவதிலும் 0 சதவீத வரி உயர்வு முன்மொழிந்த அல்லது அங்கீகரித்த ஒரே நகராட்சியாக வாகன் உள்ளது. இதன் பொருள், இந்த ஆண்டில் உங்கள் சொத்து வரிப் பில்லில் நகரத்தின் பங்கிற்கு எந்த உயர்வும் இருக்காது.

உங்கள் சொத்து வரிப் பில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது: வாகன் நகரம், யார்க் பிராந்தியம், மற்றும் உள்ளூர் பள்ளி வாரியங்கள் (கல்வி நோக்கங்களுக்காக ஒன்ராறியோ மாகாணம்). பிராந்திய மற்றும் கல்வி தொடர்பான சொத்து வரி விகிதங்கள் முறையே யார்க் பிராந்தியம் மற்றும் ஒன்ராறியோ மாகாணத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன. யார்க் பிராந்தியம் மற்றும் உள்ளூர் பள்ளி வாரியங்கள் சார்பாக வரிகளை வசூலித்தல் வாகன் நகரத்தின் சட்டப்பூர்வ கடமையாகும். யார்க் பிராந்தியத்தின் பட்ஜெட்டை பற்றி அறிய yorkregion.ca/**budget** என்ற இணையதளத்தைப் பார்வையிடவும். ஒன்ராறியோ மாகாணத்தின் பட்ஜெட்டை பற்றி அறிய ontario.ca/**budget** என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

வாகன் நகரத்தின் 2026 பட்ஜெட் குறித்து நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை:

**சொத்து வரி ஆதரித்த செயல்பாட்டுப் பட்ஜெட்**
2026 ஆண்டிற்கான சொத்து வரி ஆதரித்த மொத்த செயல்பாட்டுப் பட்ஜெட் $434.4 மில்லியன் ஆகும்.

**மூலதன (Capital) பட்ஜெட்**
2026 ஆண்டிற்கான மூலதன பட்ஜெட் சுமார் $290.5 மில்லியன் ஆகும், மேலும் 2027 முதல் 2030 வரைக்கான மூலதனத் திட்டம் சுமார் $1.1 பில்லியன் ஆகும்.

2026 பட்ஜெட் மற்றும் 2027 முதல் 2030 வரைக்கான மூலதனத் திட்டத்தில் அடங்குபவை:

- சிறந்த திட்டமிடல் மற்றும் நகர வடிவமைப்பு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு சமூக நலனை ஊக்குவிக்கும் உலகத் தர நகரத்தை உருவாக்கும் **நகர மேம்பாட்டு (City-building) மூலதன திட்டங்களுக்கு $659.9 மில்லியன்.**
- வாகன் நகரின் சாலை வலையமைப்பு மற்றும் உட்கட்டமைப்பின் நம்பகத்தன்மை மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தும் **போக்குவரத்து மற்றும் இயக்கம் (Transportation and Mobility) தொடர்பான மூலதன திட்டங்களுக்கு $503.9 மில்லியன்.**
- சுற்றுச்சூழலை பாதுகாத்து, சமூக மற்றும் பொருளாதார முயற்சிகள் மூலம் நிலைத்த எதிர்காலத்தை உருவாக்கும் **சுற்றுச்சூழல் நிலைத்தன்மை (Environmental Sustainability) மூலதன திட்டங்களுக்கு $91.6 மில்லியன்.**
- தொடர்ச்சியான மேம்பாடு, புதுமை, வெளிப்படையான மற்றும் பொறுப்புடைய முடிவெடுத்தல், பொறுப்பான நிதி மேலாண்மை, மற்றும் பயனுள்ள நிர்வாகம் மற்றும் தகவல்தொடர்பு ஆகியவற்றின் மூலம் குடியிருப்பாளர்களை மையமாகக் கொண்ட சிறப்பான சேவைகளை வழங்கும் **சேவை மேன்மை மற்றும் பொறுப்புணர்வு (Service Excellence and Accountability) மூலதன திட்டங்களுக்கு $53.6 மில்லியன்.**
- பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான சமூகங்கள் மூலம் வாகனில் மேன்மையான வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் **சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன் (Community Safety and Well-being) மூலதன திட்டங்களுக்கு $44.1 மில்லியன்.**
- அனைவருக்கும் உயிரூட்டமான, பன்முகத்தன்மை கொண்ட, அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் மற்றும் சமத்துவ அடிப்படையிலான சமூகமாக வாகனை உறுதிப்படுத்தும் **செயற்பாட்டு, ஈடுபாடுள்ள மற்றும் உள்ளடக்கிய சமூகங்கள் (Active, Engaged and Inclusive Communities) தொடர்பான மூலதன திட்டங்களுக்கு $25 மில்லியன்.**
- பொருளாதார வளமும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தையும் ஊக்குவித்து, வாகனை ஒரு தொழில்முனைவோர் நகரமாக முன்னேற்றும் **பொருளாதாரச் செழிப்பு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் (Economic Prosperity and Job Creation) தொடர்பான முயற்சிகளுக்கு $300,000.**

**குடிநீர், கழிவுநீர் மற்றும் மழைநீர் பட்ஜெட்**

2026 ஆண்டிற்கான குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டண விகிதம் மற்றும் மழைநீர் கட்டணத்தால் ஆதரிக்கப்படும் செயல்பாட்டு திட்ட பட்ஜெட்டின் மொத்த செலவுகள் $217.8 மில்லியன் ஆகும். அதாவது:

- 2026 ஆண்டிற்கான குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைந்த கட்டண உயர்வு கன மீட்டருக்கு $0.1777 அல்லது 3.3 சதவீதம் ஆகும்; இது 2025 ஆண்டின் இணைந்த குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணத்தைக் காட்டிலும் அதிகமாகும். ஆண்டிற்கு 240 கன மீட்டர் குடிநீர் பயன்படுத்தும் பயனாளருக்கு, ஆண்டுக்கு $42.65 அல்லது மாதத்திற்கு $3.55 அளவு கூடுதல் செலவாகும்.
- 2026 ஆண்டிற்கான மழைநீர் கட்டணம், 2025 கட்டணத்தை ஒப்பிடுகையில் சராசரியாக 9.5 சதவீதம் அதிகரிக்கும். குறைந்த அடர்த்தியுள்ள குடியிருப்புச் சொத்துகளுக்கு, ஒரு யூனிட்டிற்கு ஆண்டுக்கு $3.05 அளவு கூடுதல் கட்டணம் இருக்கும்.

மேலும் விவரங்களுக்கு நகரத்தின் 22026 பட்ஜெட் மற்றும் 2027 முதல் 2030 வரை மூலதனத் திட்டம் (PDF) ஆவணத்தைப் படிக்கவும் அல்லது vaughan.ca/**budget** என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

**மேற்கோள்**
மேயராக, வாகன் நகரம் பாதுகாப்பான, நம்பகமான மற்றும் அனைவருக்கும் ஏற்ற செலவுடைய சமூகமாகத் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதே என் கடமை. அதனால், நான் முன்மொழிந்த சொத்து வரி உயர்வு இன்றியும், சேவை குறைப்புகள் இன்றியும் உள்ள 2026 பட்ஜெட் மற்றும் 2027 முதல் 2030 வரை மூலதனத் திட்டத்தைக் கவுன்சில் ஏற்றுக்கொண்டது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. நாங்கள் உங்களுக்கு நிதி அழுத்தங்களில் இருந்து சில நிவாரணத்தை வழங்கி, போக்குவரத்து நெரிசலை எதிர்த்து, சமூகப் பாதுகாப்பை மேம்படுத்த உண்மையான முதலீடுகளைச் செய்து வருகிறோம். இந்தப் பட்ஜெட், சரியான முன்னுரிமைகளில் கவனம் செலுத்தும் மேயரும் கவுன்சிலும் உங்களுக்கு உள்ளனர் என்பதைக் காட்டுவதோடு, உங்களுக்கு ஒரு சிறிய நிவாரணத்தையும் வழங்குகிறது. இந்தப் பட்ஜெட் செயல்முறை முழுவதும் தங்களது கருத்துகளையும் பின்னூட்டங்களையும் பகிர்ந்த அனைவருக்கும் நன்றி. உங்களுக்காகத் தொடர்ந்து போராடி, பலனளிக்கும் முடிவுகளைக் கொண்டு வருவேன் என்பதை உறுதியாக நம்பலாம்.
- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

**முக்கியத் தகவல்கள்**

- வாகன் நகரத்தின் 2026 பட்ஜெட் மற்றும் 2027 முதல் 2030 வரை மூலதனத் திட்டம் பிப்ரவரி 24 அன்று நடைபெற்ற சிறப்புக் கவுன்சில் (பட்ஜெட்) கூட்டத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 2026 பட்ஜெட்டில் 0 சதவீத சொத்து வரி உயர்வு அடங்கியுள்ளது. இதன் மூலம், **யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொரொண்டோ பகுதி**

**(GTA) முழுவதிலும் 0 சதவீத வரி உயர்வை முன்மொழிந்த அல்லது அங்கீகரித்த ஒரே நகராட்சியாக வாகன் திகழ்கிறது.**

- உங்கள் சொத்து வரிப் பில் வாகன் நகரத்தின் கடிதவுறையில் வரக்கூடும், இருப்பினும் அது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது: யார்க் பிராந்தியம், வாகன் நகரம் மற்றும் உள்ளூர் பள்ளி வாரியங்கள் (கல்வி நோக்கங்களுக்காக ஒன்ராறியோ மாகாணம்). பிராந்திய மற்றும் கல்வி தொடர்பான வரி விகிதங்கள் முறையே யார்க் பிராந்தியம் மற்றும் ஒன்ராறியோ மாகாணத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன. யார்க் பிராந்தியத்தின் பட்ஜெட்டை பற்றி அறிய yorkregion.ca/**budget** என்ற இணையதளத்தைப் பார்வையிடவும். ஒன்ராறியோ மாகாணத்தின் பட்ஜெட்டை பற்றி அறிய ontario.ca/**budget** என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.
- 2026 பட்ஜெட், ஒன்றாரியோ அரசின் Bill 3, *Strong Mayors, Building Homes Act, 2022* உடன் ஒத்துப்போகிறது.
- 2026 பட்ஜெட்டை பற்றிய விவாத கூட்டங்கள் பிப்ரவரி 4 மற்றும் பிப்ரவரி 24 அன்று வாகன் நகர மண்டபத்தில் உள்ள கவுன்சில் அறையில் நடைபெற்றன; பொதுமக்கள் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்புகளும் வழங்கப்பட்டன.

**மேலும் அறிய**

- வாகன் நகரத்தின் பட்ஜெட் வலைப்பக்கம். .
- வாகன் நகரத்தின் 2026 பட்ஜெட் மற்றும் 2027 முதல் 2030 வரை மூலதனத் திட்டம் (PDF).

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca